கவிதைப்பேழை

# இயல் ஒன்று

# ஒன்றல்ல இரண்டல்ல

நுழையும்முன்

தமிழ்நாடு நிலவளமும் நீர்வளமும் மட்டுமன்றிப் பொருள்வளமும் அருள்வளமும் நிறைந்தது. அதே போல தமிழ்மொழி இலக்கிய வளமும் இலக்கண வளமும் நிறைந்தது. தமிழ்நாட்டு மன்னர்களும் வள்ளல்களும் கொடைத்திறன் மிக்கவர்களாக விளங்கினர். இக்கருத்துகளை விளக்கும் பாடலை அறிவோம்.

*ஒன்றல்ல இரண்டல்ல தம்பி – சொல்ல*
*ஒப்புமை இல்லாத அற்புதம் தமிழ்நாட்டில்*
*(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)*

*தென்றல் தரும் இனிய தேன்மண முல்கமழும்*
*செங்கனியும் பொன்கதிரும் தந்துதவும் நன்செய்வளம்*
*(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)*

*பகைவென்ற திறம்பாடும் பரணிவகை – செழும்*
*பரிபாடல் கலம்பகங்கள் எட்டுத்தொகை – வான்*
*புகழ்கொண்ட குறளோடு அகம்புறமும் – செம்*
*பொருள்கண்ட தமிழ்ச்சங்க இலக்கியப் பெருஞ்செல்வம்*
*(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)*

*முல்லைக்குத் தேர்கொடுத்தான் வேள்பாரி – வான்*
*முகிலினும் புகழ்படைத்த உபகாரி – கவிச்*
*சொல்லுக்குத் தலைகொடுத்தான் அருள்மீறி – இந்த*
*வள்ளலாம் குமணன்போல் வாழ்ந்தவர் வரலாறு*
*(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)*

*– உடுமலை நாராயணகவி*

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| ஒப்புமை | இணை | முகில் | மேகம் |
| அற்புதம் | வியப்பு | உபகாரி | வள்ளல் |